உ

கடவுள்துணை.

# மதுரைப் பதிற்றுப்பத் தந்தாதி.

பரஞ்சோதி மாமுனிவர்

அருளிச்செய்தது.

இஃது.

திருநின்றவூர்

அருணாசலமுதலியாரால்

பரிசோதித்து.

ஸ்ரீ - இரத்தினமுதலியாரால்.

சைதாபுரம்,

சோமசுந்தரமுதலியாரது

ஸ்டார் ஆப் இந்தியாபிரஸ்ஸில்

அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

விபவஞு ஐப்பசிமீ.

MADRAS.

PRINTED AT THE STAR OF INDIA PRESS.

35, MAKEY MOOTIA MOODELLIAR STREET.

1868.

உ

கடவுள் துணை.

# மதுரைப் பதிற்றுப்பத் தந்தாதி.

காப்பு.

பைந்தொடிபாற்சொக்கர் பதிற்றுப்பத்தந்தாதிச்
செந்தமிழைப்பாடச் செயலளிக்குஞ் - சந்ததமுஞ்
சிந்தாவளமதுரைச் சித்திவிநாயகனுந்
தந்தாவளமதுரை தந்து.

மேகம்வரக்கண் டுள்ளங்களித்து விரிக்குந்தோகை மயிலாடப்
பூகமனைத்தும் வெண்டாளம் பொழியுமதுரைக் கயற்கண்ணாள்
பாகமிருக்குஞ் சொக்கர்பசு பதியாயண்டப் பரப்பாகி
ஏகமெனக்கொண் டிருப்பாரென் னிதயத்தலத்து மிருப்பாரே. (௧)

இருக்குந்திருக் கோலமுமுமை யாளிடப்பாகமுநூ லிலங்குகின்ற
மருக்குங்குமமார்பமும் புயமும்வரதா பயமுமான் மழுவுந்
திருக்குண்டலமு மதுரேசர் சின்மூரலுமென் கன்மனத்தை
யுருக்கும்வத னம்புயமு மெனக்குவகை விளைக்குமுயிராமே. (௨)

விளைக்குமுயிரிற் பிறந்தொடிங்கி மேவுபவத்தை தனைப்போலக்
கிளைக்குமுலக ளின்பால்வந் தடங்கக்கிடந்த கீர்த்தியெல்லாம்
வளைக்குமிடமோ சிற்றகில மதுரைக்கயற்கண் மடந்தைமேலே
திளைக்குமணியே தெவிட்டாத தேனேமுக்கட் செழுங்கனியே. (௩)

கனியுங்கிழங்குங் கருக்காயுங் காற்றுஞ்சருகு மருந்தியிரு
பனியுமழையும் வெயிலுநின்று படிவந்திரிந்து புலனைந்தும்
முனியும்படிவீ ணருந்தவஞ்செய் முனிகாண்மதுரை புகுவீரேல்
இனியுங்களுக்கு மதுரேச ரெல்லாப்பதமுந் தருவாரே. (௪)

தருவேவறிஞர்க் கிருநிதியே சனகாதியர்க்குப் பொருளுரைத்த
குருவேகுருமா மணிச்சுடரே கோதிலாத செழுந்தேனே
யருவேயுருவே யருவுருவே யகிலாண்டமும் வந்தடங்குதற்கோர்
கருவேமதுரை வருகடப்பங் காட்டாயுனைநீ காட்டாயே. (ரு)

காட்டத்தெரிபோற் கலந்தநெறி காட்டத்தெரியு மேங்குமனக்
கோட்டத்தெனது சிற்றறிவாற் குறிக்கப்படுமோ கூறாய்நீ
ஈட்டக்களிவண் டடைகிடக்கு மிதழிக்கினம்போல் வேப்பலங்கல்
சூட்டப்பசும்பொன் முடிசூடுஞ் சொக்கேமதுரைத் தூயோனே. (சு)

தூயகயற்கண்மடக்கோடி சேர்சொக்கே முக்கட்சுடர்க் கொழுந்தே
சேயபவளக் கிரியேயென் சிந்தாமணியே தெள்ளமுதே
காயமுதலாங் கடைச்சரக்குன் கருகூலத்தி லிருந்துவரும்
மாயமறியே னிச்சரக்கு மாறுச்சரக்கோ கூறாயே. (எ)

கூறொன்றுளதாஞ் சத்தியொரு கூறுஞ்சிவமே கூறுங்கால்
வேறொன்றுளதோ மெய்புனக்கு மெய்கண்டவர்க்கு வெளியாமால்
ஏறொன்றுடைய பசுபதியே யெழுவாரிதியு மழைத்துவையை
ஆறொன்றழைத்த வருட்கடலே யாலவாயி லமர்ந்தானே. (அ)

அமரர்க்கிறைவா மும்மூலைப்பெண் ணுனகுமரிக்க ழகாதென்
குமரித்துறைவா வென்றுநித்தங் கூடற்சிவனைப் பாடாமல்
தமருக்கெனினும் பசிதணிக்கத் தறுகட்கொடியர் தமைப்பாடிக்
கமருக்கிறைப்பார்க் கினமான கலைவாணருநெஞ் சலைவாரே. (கூ)

உலைமேன்மெழுகொத் துறுபிணியா லுருகவிதிசற் றருகாதென்
தலைமேலெழுதுந் தியெழுத்தைத் தண்ணீரொழுத்தாத் தணிப்பாயோ
முலைமேல்விளங்கு முத்தெனவெண் முறுவலரும்பு மோட்டிமய
மலைமேன்மருந்து கலந்தமுக்கண் மருந்தேயால வாயானே. (ய)

வேறு.

வாயினும்புலை யுடம்பினுமனத்தினு மறத்துறை படிந்தாடு
நாயினுங்கடை யேன்கிடை நோயொடு நல்குரவொழிக்காயோ
தீயினுங்கொடியார் புரம்பொரு தனிச்சிங்கமே யென்கோவே
தாயினுந்துணையே மதுரேசனே தத்துவங் கடந்தோனே. (யக)

தத்துவப்பெரு நாடகசாலையுஞ் சமைத்த விநயங்காட்டி
அத்தலத்தெனை யாட்டுவிப்பானு மென்னுடலைக் காண்பானும்
எய்த்திடப்பெரு தெழுதிரை நீக்கிவந் தெடுத்தெனதிளைப்பாற
வைத்துமெய்ப்பதந் தருகொடை வள்ளலுமதுணர் வெள்விடையானே.

வெள்விடைக்கொடி யுயர்த்தசொக்கேயைந்து விடயமென் றெடுத்தோ
கள்வருக்கென தறிவறை போனதென் கருத்தைநீயறியாயோ [துங்
வுள்வருத்தமும் பிறவுமேகண்டிருந் தொளித்தனை யெனையுய்யக்
கொள்வதற்கிது பருவமென்றேயினிக் கூப்பிடக் கடவேனே. (௰௩)

கடவதொன்றிலை யுரைசெய மனமுதற் கரணமுஞ்செயலாதி
அடவருந்துய ரின்பமுநீயெனை யருத்துத லறியேனுன்
மடவனம்பெடைக் குருகொடு மணஞ்செய மணஞ்செறிமலர்க்காவிற்
குடவலம்புரி முழங்கவான் முழவதிர் கூடலம்பதியானே. (௰௪)

கூடலாதியை யணங்கொரு பாகனைக் குணங்குறியில்லானை
வீடலாவெளி வீட்டிருந்திமையிலா விழியினாற் கண்டோர்கள்
ஓடலாதுபொற் கலத்துண்டு பெண்ணலா ரொண்ணலத்துறையாடிப்
பாடலாடலிற் பயிலினு மிருவயிற் பற்றறுத்திருப்பாரோ. (௰௫)

பற்றுக்கோடுநின் பதமன்றியிலைநெடும் பாய்மரக் கொடிபோலச்
சுற்றுக்கோடியுஞ் சுழன்றுமெய்த் தேனினித்துன்புறுந்தகையென்னே
கற்றுக்கோதறத் தெளிந்தவர்க் கமுதமே கயற்கண்மாதிடப்பாகம்
பெற்றுக்கோயில்கொண்டமர்ந்தருளாலவாய்ப் பிறையணிசடையானே.

சடைக்கிசைந்தவெண் டிங்களுங்கங்கையுஞ் சங்கவெண்குழைக்காதும்
படைக்கணிச்சியுஞ் சூலமுஞ்செங்கையும் பங்கயத் திருத்தாளுங்
கடைக்கணித்தருள் சுரந்தகண்களு மணிக்கண்டமுமதுரேசர்
அடைக்கலப்பொருள்காக்குநன்னெறியும்யானயர்ப்பனோவயரேனே. ()

அயர்க்கிலேனுனை நினைக்கிலேன் பிறரைநின்னாலவா யகம்விட்டுப்[தோ
பெயர்க்கிலேன்பத மென்னவும்பெறுவனேற் பெறற்கரும் பொருள்யா
துயர்க்கிலேசமற் றுனதுபொன்னாலயஞ் சூழ்ந்துகை தொழுதேமெய்
வெயர்க்கிலேனையும் புரந்தருள்வள்ளலே வெள்ளியம் பலத்தானே. ()

வெள்ளியம்பல வாணனைப்பாணனுல் விறகுவிற்றுழல் வானைப்
புள்ளியம்புலித் தோலுடை யாளனைப் புந்தியாற்றெழுதோர்கள்
பள்ளியந்துலா வேறுவர் மணிமுடி பரிப்பர்பார்முழுதாள்வர்
தெள்ளிருங்கலை நன்மகப்பெறுவர் பின்சிவகதி யடைவாரே. (௧௯)

அடைந்தவர்க்கருள் வெள்ளிமன் றுடல்செ யானந்தக்கட்லூடு
குடைந்தவர்க்கமு தெழுமதிலெழுபவக் குரைகடற் கரைகாண்பார்
மிடைந்தவர்க்கவெண் குட்வளைமுழக்கறு விரிகடல் கிடந்தார்ப்பக்
கடைந்தவர்க்கமு தெழுமதிற்பவக்கடல் கடப்பரோ கட்வாரே. (உ௰)

வேறு.

கட்வரையுரிவை போர்த்துக் கதம்பகாந் தாரத்தாடும்
வட்வரைவளைத்த செந்தேன் வான்மகன் முடிக்குமேலாந்
தட்வரைச்சென்னிதாங்கு தண்ணருந் தரையின்வேட்ட
முட்வரை நிகர்ப்பநானு முகந்துணத் தொடங்கினேனே. (உ௧)

தொட்ங்குமைந் தொழிலுமோயப் பெயர்த்துமோ தொடங்குவாயீ
தட்ங்குவ தெந்தக்கால மாருனக் கயிக்கமையா
முட்ங்குபைங் குலையிற்பூந்தேன் முரிதிரைப் பரவைக்கேமு
மட்ங்குதண் கதலிசாய்க்கு மதுரையிற் சிவபிரானே. (உஉ)

சிவமொடு சத்தியாகிச் செகமெலா நிறைந்தநீயே
நவவடி வெடுத்தாயிந்திர ஞாலமோ கோலமேயோ
பவமறத் தவஞ்செயாத பழவினைக் கொடியேற்கின்று
தவமெனப் பொலியுங்கூடற் சயம்புவே யியம்புவாயே. (உங)

இயம்பிடு மிருளைநீக்கி யெனைவெளிப் படுத்தல்வேண்டும்
கயம்படு துறையில்வீழ்ந்த கண்ணிலிக் குதவுவான்போற்
பயம்பட வெண்பொற்சோதி படருமன் றத்தினூடு
நயம்படு மறைகள்பாட நாடக நவிற்றுவோனே. (உச)

நாட்கத் தொழில்வராத நட்டுவக் குறையோநாளும்
பாட்கப் பதுமம்பூத்த பாத்திரக் குறையோசொல்லாய்
சூட்கத் தளிர்க்கைபாகா சோமசுந் தரனேகூட்ல்
ஆட்கக் குன்றே யென்னை யாட்டுவித் தனைநன்றாயே. (உரு)

நன்றுளே னல்லேன்யார்க்கு நல்லறம் புரியேனன்றிக்
கொன்றுளே னற்றம்பார்க்குங் கூற்றுவன் விடுவானல்லன்
இன்றுளே னாளையில்லேன் யமன்வரும் போதுன்வெள்ளி
மன்றுளே யிருந்தசொக்கே வழக்குநீ யென்சொல்வாயே. (உசு)

என்சொல் கேளென்சொல் கேளென்னேழைமை யிருந்தபாவம்
புன்சொலாற் பாடிப்பாடிப் புகழ்பெற விரும்பாநின்றேன்
வன்சொலார் முன்செலாத மதுரையிற் சொக்கேவேதம்
உன்சொலா லுன்னைவாழ்த்தி யுன்னையு முணராதன்றே. (உஎ)

உன்னையே பொருளென்பார் மற்றொருவனைப் பொருளென்பாரோ
பொன்னையே பொதியப்பார்ப்பார் புழுதியைப் பொதிவார் கொல்லோ
அன்னையே தந்தையே தென்னாலவாய்ச் சொக்கேதஞ்சம்
பின்னையே துணையலாமற் பிறந்திறந் துழலுவோர்க்கே. (உஅ)

பிறந்திறந் துழல்வீர் நீங்கள் பிறதெய்வந் தொழுதோவுய்வீர்
கறந்தருந் தினருமுண்டோ கற்பசு முலையைக்கையால்
அறந்துறந்தவர்க் கெய்தாதவாலவாய்ச் சொக்கர்தாளை
மறந்திருந்தினிக் கெடாமல் வணங்குவீர் வணங்குவீரோ. (உகூ)

வணங்கினர்க்கிதஞ் செய்யாமல் மறலிவாய்க் கிரையாய்வாழும்
பிணங்களைப் பின்செல்வீர் நும்பேதைமை தவிரவேண்டில்
அணங்கினுக்கணங்கு கூடலங்கயற் கண்ணாள்பாகன்
குணங்களைப் பரவியன்னோன் கோயிலை வலஞ்செய்வீரோ. (௩0)

வேறு.

செய்வானுஞ் செய்விப்பவனுஞ் செயும்பொருளும்
பைவாளரவப் பணிதரித்த சொக்கேநீ
யுய்வாரஃதறிவா ருன்னருளொன் றுன்னியவர்
வைவாரை நோகார் மதிப்பாரை வாழ்த்தாரே. (௩க)

வாழ்வார்க் கியற்கைமதுரேசர் கோயில்வலஞ்
சூழ்வார்க்குத்தொண்டு செயுந்துன்ப மிலாப்பேர் வாழ்க்கை
வீழ்வார்க்கடையாளம் வீணரொடுங் கூடிவெறுங்
கூழ்வார்ப்பவர் தமக்குக்குற்றேவல் செய்வதுவே. (௩உ)

குற்றேவல் செய்பவனாக் கும்பிடேன் கோயில்வலஞ்
சுற்றேன் மெழுகேன் சுடர்த்திரியுந் தூண்டுகிலேன்
கற்றேனு மல்லேன் கடம்பவனச் சொக்கேநான்
மற்றேதினியுரைக்கேன் வன்கூற்றுக்கென்கூற்றே. (௩௩)

கூற்றுக்கோல் கோடான் கொடியவனென் றென்னையனல்
ஆற்றுக்கோ கீழ்ப்படுத்தி யண்ணுத்தல் செய்யாத
சேற்றுக்கோ வீழ்த்தத்திரிகின்றான் வீழாமல்
ஊற்றுக்கோல் சொக்கே யுனதருளென்றுன்னேனே. (௩௪)

உன்னூர் பிறப்பருடையாய் கயற்கணமு
தன்னாளுநீயு மகலாத வீற்றிருப்புந்
தென்னாலவாயுந் திருமதிலுங் கோபுரமும்
பொன்னாலயச்சிறப்பும் பொற்கமல வாவியுமே. (௩௫)

வாவியார் கூடன்மணி கண்டத்தானையின்னே
சேவியா நாட்குறித்துச் சேவிப்போ மென்பதென்னே
ஆவியார்போம் போதவரை மறித்தாணையிட்டுக்
கூவியார்மீட்பார் குடிபோன வீட்டுடே. (௩௬)

வீடுகட்டி மாடுகட்டி மெய்யிறுகக் கட்டும்வினைப்
பூடுகட்டி விட்டுப்புறப்பட மாட்டாதுலண்டு
கூடுகட்டியாங்கே யென்கோட்டை கட்டினேன் கட்டப்பங்
காடுகட்டியாளு முக்கட்கட்டித் திரவியமே. (௩௭)

கட்டுக்கிடையாமென் கன்மனத்திலே குருத்து
விட்டுப்படருமிந்த வேலிகட்டா வேளாண்மை
தட்டுப்படாதாய்த் தலையானட்டப் தென்று
மட்டுப்படுமோ மதுரைச்சிவக்கொழுந்தே. (௩௮)

கொழுந்து மதியணியுங் கூடலிலெங்கோவெ
யுழுந்துருளும் போதெனினு முள்ளுவகையுள்ளூறச்
செழுந்துளவ னாறுந்திருவடிக் கீழ்நெஞ்சம்
அழுந்துவ தொன்றல்லா லமருலகும் வேண்டேனே. (௩௯)

வேண்டார் புரமெரிய வில்வளைத்த சேவகனே
தூண்டாமணிவிளக்கே சொக்கப்பெருமானே
ஆண்டார் பெருமையடிச் சேரிக்காகாதோ
நீண்டாவினையேன் சிறுமையென்று தீர்ப்பாயே. (சுய)

வேறு.

பாயிருக்கத் தரைகிடத்தும் வினையின்பான்மைபழமிருக்கக்காயுதிர்க்கும்பழுத்திடாத, காயிருக்கப்பழமுதிர்க்குமென வொண்ணுதகழிமட்டுமடுபிணியுங்கலியுநீக்காய், சேயிருக்குங்கொன்றையணி சொக்கேமிக்க திலகநுதற் கயற்கணெனு மூலகமீன்ற, தாயிருக்க நீயிருக்கத்துணையிலார் போற்றளர்ந்திருக்க நீதியுண்டோ சரண்புக்கேனே. (சுக)

சரணமலர் கண்டிறைஞ்சு மெதிகள்யோகர் தவமுனிவர்முதலோர்க்குச் சகளமாகி, அரணமலிதமிழ்க்கூடலாலவாயிலம்மையொடு மூலலிங்கத் தமர்ந்தகோவே, கரணமறியாதுயிருமறியாதென்று கடவுளருட்கண்காட்டக் காண்கின்றோர்க்கு;மரணமுதல் வன்பிணிகள்வரவொட்டாத வயித்தியனீ யுனதருளே மருந்துதானே. (சுஉ)

தான்விளைக்குங்கருஞ்சேற்றைக்கழுவிநீக்குந்தண்புனல்போலிருவினைக்குந் தனுவாய்நின்ற, ஊன்விளைக்குமொழிக்குமெனுமுறையாலிந்தவுடலிருந்தன்றோவுறுகிபயக்க வேண்டும், நான்விளைக்கு மிதன்றொழிலுக்கெனையுங்காட்டிநடத்துவிக்குமதிகாரிநானன்றேசெந், தேன்விளைக்குங் கடம்பவனநாதாதெய்வத்திருவாலவா யமர்ந்ததேவதேவே. (சுங)

தேவியனைத் திருக்கழுத்திலமரர்பூட்டுந் திருநாண்மங்கலநிலையிற்பிரியாவண்ணம், மேவியமைக்கடல் விடத்தைமிடற்றே வைத்துவிரிஞ்சன்மாலா தியந்தவிண்ணோர்க்கெல்லாம், ஆவியுறச்செய்தருளென்னப்பாகூடலால வாயருமருந்தே யடியனேனைப், பாவியெனத் திருவுளத்திலடைத்தன்றோவென்பழவினையைத் தீர்த்தருட் கண்பார்க்கிலாயே. (சுச)

பாரறியு மறிவினுமிப்பார்மேனின்றபசுஞானத்தாலுமெட்டிப்பார்க்கொணுத, பேரறிவேசிற்றறிவேற் கிருளைநீக்கும் பேரொளியே யங்கயற்கண் பிரியாதானே, யாரறிவார் தமிழருமை யென்கின்றேனென்னறிவீனமன்றோ வுன்மதுரை மூதூர், நீரறியுநெருப்பறியு மறிவுண்டாக்கி நீயறிவித்தாலறியு நிலமுந்தானே. (சுரு)

நிலத்தூடு நிலத்தினுயிர்ப்பயிர்களூடு நெடுவிறகிற்றீயூடு மடுபாலின் பதுநிலத்தூடுதயில மெனவுறைவா யிந்தச்சீவன்மூத்தி புரமென்னுந்துவாதசாந்தத், தலத்தூடென் றிருவருளென்னிடத்தே வைத்துத்தருவாகிப் புதலாகித் தரியென்றாலும், மலத்தூடு புழுவடிவாய்ப் பிறவென்றாலு மறித்துமொழியேன் சனனமனக்கொள்வேனே. (சகூ)

கொள்ளிவட்டங் கறங்குதிரை சகட்க்கால் வெண்குறுந்தொடியார் தயிர்மத்து நெடுந்தாளூஞ்சல், எள்ளிவிட்ட தொழிற்பிறவித் தண்டல்போக்கி யிறைவாங்கு நமன்குடிகாளின்று நீர்தாந், தெள்ளியிட்ட வெள்ளைநிலாத் தெளித்தல்போலுந் திருவாலவாயிறைவன் றிருவெண்ணீற்றை, அள்ளியிட்டாற் புள்ளியிட்டகணக்கு மாற்றியமருலகிற் கணக்கனெழுத்தழிக்கலாமே. (சஎ)

அழித்தபடிபடைத்துவிளையாடு வானையாலவாயானையட்டலரி மானேற்றைக், கிழித்தவதளுடுத்து வெள்ளிமன்றுளாடுங் கேடிலியைத்தொழுதிருக்கக்கிடைத்தமேலோர், பழித்தலும் வாழ்த்தலு மெறிவாட்படையுஞ் சாந்தும் பாத்திரப்பாலடி சிலுங்கைவார்த்த கூழும், மழித்தலு நீட்டலுந்தமர்சூழ் வளமைநாடும் வறுங்காடு மொருபடித்தாய் மதிப்பர்தாமே. (சஅ)

மதியிலேனிதுவரையும் வரையாதீட்டும் வன்பாவச்சரக்கனைத்து மனவாக்காயப், பொதியிலேகொடுதிரிந்தும்பழுதுபோகாப் பொழுதுபோக்காது சிலபுசித்தே னெங்குங், கதியிலே பழவடியார் தம்மைக்கூட்டுங் கயற்கணுமை கலந்துறையுங் கடவுள்கூடற், பதியிலே புகுந்தளவில்வறிதே தீயபழஞ்சரக்கும் புதுச்சரக்கும் பணியற்றேனே. (சகூ)

பணிவிடை செய்பவர்க்கருள் கூர்பரனேசெங்கைப்பசுங்கிளியுந் தவளநகைப்பவளவாயுந், தணிவிடையும் பணைமுலையு முடையாள் பங்கிற் சங்கரனே தென்கூடற் சயம்புவேகேள், அணிவிடையம் பொறிகலங்கியைம்மேலுந்துமுன்றையில்விண்ணப்பமின்றே யடியிட்டேனுன், மணிவிடையின் மணியோசை மறலியூர்தி மணிநாவையடக்கும் வகைவருதிநீயே. (ருய)

வேறு.—நீயும்பசுபதியார்குஞ் சிவமயநின்பா லனுதினமன்பான
தாயுந்திருவருளுநகளந்தரு மொருசகளம் பொலிவதுதனைநாடேன்[னோ
வாயுண்டுனா செயமனமுண்டுருகிடமயல் கொண்டவனென மருள்வே
தேயும்பிறைநதி தோயுஞ்சடைபுனைதென் கூடலில் வருமெங்கோவே.

கோவேதமிழ்புனை தேவேவளமலி கூடற்பதிபொலி குளிர்நீழற்
காவேயுயரியமலையே யருணிறைகடலே யிமையவரடலேறே
நீவேறுயிர்களு மூவேறியல்பென நின்றாய்விதி முறைநில்லாவென்
நாவேமுதலிய கரணங்களுமுனை நன்றாய் வழிபட நல்காயே. (ருஉ)

நல்குஞ்சுழிமுனை யிடைபிங்கலை யெனுநாடித் திரியமதை நாட்டாமே
மல்குங்கனலியில் வளிசென்றுருகிய மதிவெண்கலைய முதயிலாமே
பல்குந்திருவருள் விழிகொண்டுனை திருபதபங்கய மலர்பாராமே
யல்கும்பொழு தவம்விடுவே னருள்புரியாயே மதுரையிலையாவே. ()

ஐயப்படுபொருளை யப்படுமவரறியத் தகும்வகை யறிவித்தே
குய்யப்பிறவியை விடுவித்தருள் புரிகூடற் பதிவருமுமைபாகா
பையத்திருவருள் செய்யப்பெறிலதி பாவப்பிணிதணிபான் மைத்தே
யுய்யப்புகலிட மினிவேறிலை யெனையுடையா யுறுவினை துடையாயே.()

துடையாலிழைபுனை யிடையாலிடைபுனை துகிலால்வனிதையர் நகிலா
ன்மைப், படையான்மடவன நடையாலினியிடர் படவேநிலமிசை கட்
வேனோ, விடையார்பிறையணி சடையார்மதுரையில் வினையேன்வழி
பட் விலையோலை, யுடையாரடியரோ டெனையாள்பவரென துள்ளேயு
றைபவர்தள்ளாரோ. (ருரு)

தள்ளுண்டவரொடு தள்ளுண்டறிவழி தமியற்குறுகதி தருவானைத்,தெ
ள்ளுந்தமிழுயர் மதுராபுரிவரு திரிசூலப்படை யுடையானை, யுள்ளும்
புறமுமொ ரொளியென்றுணர்பவ ருனந்தவிர்பர மானந்தக், கள்ளுண்
டுருகுவ ருணரார்நமன்வலை கட்டுண்டுழலுவர் கருவூடே. (ருசு)

கருவிதளர்ந்தொரு விகிர்திபிறந்திரு கால்கைகுறைந்திரு கண்பஞ்சிட்
டிருவினையின்பய னெனவுயர்கொம்பி லிசைத்தகுடம்பை தனித்தொ
ழியக், குருவிபறந்தென வுயிர்செலுமுன்றிகல் கொடியநமன்றமர் கொடு
போமுன், வருவிகணங்களை யடிகளைநம்பினன் மறையோய்மதுரையி
லிறையோயே. (ருஎ)

இறைவர்பரம்பரர் மதுரையுகந்தவ ரிருகரைவெண்டிரைபொருவையை
த்,துறைவரசஞ்சலர்நிமலர்நிரஞ்சனர்சொக்கர்பதத்துணை துதிசெய்தார்
பிறைநுதல்வஞ்சிய ரனுபவமுண்டு பிழைப்பினுமங்கது பிழையன்றே
உறையொடுமந்திரமுடையவர்நஞ்செனலொழிவதுகண்டனமுலகூடே.

உலகமடக்கொடி மங்கலநாணென வோலைக்குழைபொரு நயனமெனத் திலகமெனப்பொலி கூடலினுண்டொரு தேட்டருமாமணி செப்புமதோ பலகலைகற்றவர் தாமறியாதொரு பச்சைபழுத்த புறத்துடே, இலகொளிவிட்டொரு கோடிதிவாகர ரென்னவிளங்கி யிருப்பதுவே. (ருகூ)

இருவருமன்றுவெ ளேகினமும்வன் றேழி லேனமுமாகியு மெய்தாதத் திருவடியும்புரி சடைமுடியுங்கொடு தென்கூடலில்வரு சிவனேகேள் ஒருவரும்வந்துனை யறிகிலரென்கினு மூடல்பொருவெண்டிரை யுலகெல்லாம், வெருவருமன்பர்கள் வழிபடுபண்பினில் வெளிபடநின்றனை யொளியாயே. (சூய)

வேறு.

ஒளிமணிச்சுடிகை யணைகொள்பாற்கடலு மூற்றிருந் திளநறுவொழுகு நளினமண்டபமுங் கற்பகநாடு நாட்டரும்பொருளென நாடேன், தெளிதமிழ்க்கூட லாலவாயமர்ந்த தெய்வமேபுகலெனச் சேர்ந்த, எளியனேனுனதின் னருளேயேபொருளென் றென்னுளே யெழுதிவைத்தனனே.

எழுநதியடைத்திங் கிருநிலமிருத்திட் டென்பெலாம் வெள்ளெனத்தெரியக், கழுவினுங்கழுவாத் தகைத்தலாலகத்திற் களங்கம்விட் டொழியுமோகருதிர், முழுமதிற்கூடற் சொக்கர்பொற்சரண முண்டகங் கண்டகண்வழியே,யழுதழுதுருகு மானந்தவெள்ளத் தாடினேரமல ராகுவரோ.

ஆகமப்பொருளே யாரணத்தெளிவே யாலவாய்ச் சூலவேலரசே, நாகணைக்கணையா யுனதருளன்றோ நாரையைக்கதியிலுய்த்ததுவுஞ், சூகரக்குழவிக் கன்னையாய்முலைப்பால் சுரந்தளித்தது முபதேசங், காகம்விட்டிரியச் சிறைபுடைத்தலைச்சுருங் கருக்குருவிக்கும்வைத் ததுமே. (சூரு)

வைத்ததென்னிடத்தோர் வைப்புளததனை மதுரையிற் கண்டனன்மாதோ, கைத்தலத்திலங்கு முத்தலைவேற்றுக் கயல்விழிக்கரும்பொரு பாற்றுப், பைத்தலைப்பூட்டுப் பணைத்தவெண்கோட்டென் பாட்டினுக்கிரங்குபூந் தாட்டு, முத்தரையளந்த விடையுயர்கொடித்து மூன்றுகட்டிளம்பிறை முடித்தே. (சூச)

முடித்தலையிமையோர் வடித்தமிழ்க்கூடன் முதல்வர்பொன் னடித்தலத்திறைஞ்சப்,படித்தலத்தடைய நெருக்கலுந்திருக்கண் பார்த்திடநந்தி

சென் றடித்த, தொடித்தலைப்பிரம்பு கமழ்வனகமலத் தொடையலுஞ் சுரும்புண தரும்பு, பிடித்தலர் துளவுங் கற்பகம்பூத்த பெருவிரைக் குழங்கன்மாலையுமே. (௬௫)

மாலையம்பொழுது மாலைகண்டரவின் வடிவெனமயங்குவோன் மயக்காய், வேலையம்புவின மாயவாழ்வனைத்து மெய்யெனவினையனேன் மெலிகோ, காலையம்புயம்போன் முகத்தொளிர்கயற்கட் கரும்பொடு மதுரைமூதூரில்,ஆலயங்குடிகொளமுதவாரிதியே யாரணங்கடந்த பூரணனே.

பூரணமழியா மதியமேபிறையைப் புரையுமீராயிர மருப்பு
வாரணமிசையூர் மாணிக்கமலையே மதுரையம்பதியில்வாழ் வரதா
காரணமுலகுக் குதவுமின்னடியார் கையெழுத்திட்டதீட் டன்றே
நாரணன்முதலோர் தோரணமசைத்து நகரொலாமுறை நடத்துவதே.()

நடம்புரிமதுரை நம்பநீசிலர்க்கு நல்கியஞானநற் பயனுங், குடம்புரை செருத்த லானினம்பரந்து கொண்டிடுமண்டுதீம் புனல்போல், மடம்படுசிலர்க்குத் தீவினைப்பயனும் வாளராப்பருகுபா னியம்போல், கடம்பமாவனத்தா யினையவாவினையேன் கட்வுளோவதென் கருத்தே. ()

கருத்தனேபாச விருத்தனேதுரியங் கடந்துநின் றுலகெலாங் கலந்த, ஒருத்தனேகயற்க ணொருத்திபங்கினனே யுயரியவெள்ளி மன்றுடு, நிருத்தனேயெனக் கெந்நேரமுமுதா நெருப்பவித்திருக்கநேர முங்கண்,பொருத்தநேரமுநோய் வருத்தநேரமுமேற் புகழ்ந்துனைத்தொழுவதெப் பொழுதே. (௬௬)

பொழுதமிந்தேத்து முழுவலன்புடையோர் புந்தியங்கோயில் வீற்றிருப்போன், முழுதொருங்குணர்ந்தோன கண்டிதனகம்பன் முத்தமிழ்மதுரைவாழ் முதல்வன், எழுதருங்கடவு ளனைத்தையுங்காட்டி யெவற்றினுந் தோய்வதொன்றில்லான், பழுதகன்றடுத்த துணர்த்துவெண்படிகம் பத்திபாயாதவா றெனவே. (௬௭)

வேறு.

எனக்குன்சேவையை நல்கிடவென்மனம்
உனக்கிடுந்திறை யுன்வசங்கைவிடேல்
கனக்கும்வஞ்சமுங் கள்ளமுமுள்ளவன்
மனக்குறும்பெறி வாய்மதுரேசனே. (௭௧)

மதுரையாளும் வழுதிக்கிலனைக்
குதிரையாகக் கொடுவந்தகொற்றவா
அதிருநான்மறை யந்தணனேயுனக்
கெதிரிலாயெனக் கென்னிரங்காததே. (எ௨)

இரங்குநீயினி யென்னுடைச்சுற்றமுன்
பரங்கள்கூடற் பழியஞ்சியப்பனே
வரங்கண்மூன்றுள வாக்குனைவாழ்த்தவென்
கரங்கள்கூப்பிடக் கட்புலன்காணவே. (எ௩)

காணவந்த கடம்பவனேசர்தாள்
பூணவந்தது புந்தியென்றுலெமை
யாணவந்தொடுத் தஞ்சுமிங்கஞ்சுமே
நாணவந்த நமன்சினமாறுமே. (எ௪)

ஆறடைத்த வழகியசொக்கனை
மாறெடுத்து வழுதியடித்தநாள்
ஊறுபட்ட வுடம்புமக்கில்லையோ
வேறினித்தெய்வ மென்கின்றவீணரே. (எ௫)

வீணளந்த விரதமில்லாமலென்
சாணளந்த சரீரந்தளர்வனே
சேணளந்தவெண் டிங்களைச்செம்மணித்
தூணளந்த மதுரையிற்சோதியே. (எ௬)

சோதிவெண்பிறை சூடியகூடலான்
ஆதியந்த மிலானெழுத்தஞ்சுடன்
பூதிகண்டிகை யைப்பொருட்கொண்டிடாச்
சாதியன்பியுண் டோபுலைச்சாதியே. (எஎ)

சாதிக்கின்ற சமாதிவிட்டப்புறம்
போதிக்கின்ற பொருளையெங்கேயெனப்
பேதிக்கின்றனை பேதைநெஞ்சேயினிச்
சோதிக்கின்றதென் சொக்கரிருக்கவே. (எ௮)

சொக்கருண்டு துணையென்றிராயவர்
பக்கமன்பு பழுத்ததென்றோர்கிலாய்
மக்களென்று மனையென்றும்வாழ்வென்றும்
ஒக்கலென்று முருகுமென்னெஞ்சமே. (எசு)

நெஞ்சமால்ய நெல்விருகாழிநங்
தஞ்சமான தமிழ்ச்சொக்கர்தங்கொடை
கஞ்சமாது கயற்கட்பிராட்டிக்கு
மஞ்சமார்பு மணவறைவாமமே. (அ௰)

வேறு.

வாமாவுயர் நரவாகன மதமாவொடு திண்டேர்
தாமாமவை கொடுவந்திவை தாமென்பவர் தம்போற்
போமாகமுநா மென்றுரைபொய்யே யினிமெய்யே
ஆமாறருண் மதுராபுரியணிமால் விடையானே. (அக)

ஆனென்பது தருமைந்தையு மாடும்பெருமானை
வானென்பது முதலாகிய மதுரேசனை வாழ்த்தி
யானென்பது மெனதென்பது மிபமுண்ட வீளாரேர்
தானென்பது குறியானது தவமென்பது மவமே. (அஉ)

அவமே பொழுதொழியாதினி யழியாநிலைவரவும்
பவமேமுதல் வினைநீடிய பாசத்தளை விடவும்
உவமேயமு முவமானமு மொன்றாகிய மதுரைச்
சிவமேயருள் செயுநீயொரு செயலற்றிருமனமே. (அ௩)

மனவூசலிலுழல் வேனையு மதுராபுரியீசன்
நனவூடொரு பொருளாயிரு நயனங்களு நின்றூன்
கனவூடு மெனினைவூடு கலந்தானெனினி தன்மேல்
வினவூதிய முளதோ கொடுவினை சூழ்வது மிலையே. (அச)

இலையென்றுரை மனவஞ்சகரிட மன்பொடு செலுமா
புலையன்றவர் புகலும்பொருள் பொருளென்றறிவேனோ
கலையென்றில கருகொண்டிருள் கடிகின்ற வெணிலவே
மலையென்பது சிலைகொண்டருண் மதுராபுரியானே. (அரு)

அரவம் புலிபணியும் பதமருளுஞ் சடையுடையாய்
குரவங்கமழ்குழல் பங்கமர் கூடற்பெருமானே
பரவஞ்சியர் கமனங்கொலை பழிவஞ்சமொருருவாய்
வரவந்த வென்வினை தீரவரந்தந்தருளினியே. (அசு)

இனிக்குந்தமிழ் மதுரேசனை யிருபோதினு நினைவீர்
பனிக்குந்திரைகடற்கும் யமபடர்க்குந் தெறுசுடர்க்குந்
தொனிக்கும் புயலிடிக்கும் புவிதொலைக்குங் கடையனற்குந்
தனிக்குந் தனிவழிக்கும் பிணிதனக்குந் தளரீரோ. (அஎ)

தளவத்திருநகை பங்கினர்தக்கோர் பணிசொக்கர்
துளவைப்பொதி யிருசேவடி துதியாரருள்பதியார்
களவைப்புரி நயனத்தியர் கலவித்தொழில் பொருளின்
அளவைக்களவென விற்பவரழகைப் புகழ்வாரோ. (அஅ)

புகழுந்தமிழ் மதுரேசர்பொலன் சேவடிபணியத்
திகழுங்கடல் வையந்தொழு தெய்வந்தனை நிகர்வார்
நிகழுங்குல மிலராயினு நிலைகோடின ரெனினும்
இகழுந்தொழி லினராயினு மெவராயினு மவரோ. (அகூ)

ஏகத்திருவுருவத் தினனெங்கோ னுமைபங்கன்
பாகத்தமிழ்பகரும் பசுபதிமேவிய கோயில்
பூகக்குலைமேகத் திரள்பொர விண்டபசுந்தேன்
மாகப்பெருநதிபோல் வருமதுரைத் திருநகரோ. (கூ0)

வேறு.

நகைகொண்டுதுட்டர் புரமன்றுசுட்ட நடனேச நாதமுடியோர்
பகைகொண்ட சித்தசனை வென்றசொக்கர் பவளம்பழுத்த சடையார்
முகைகொண்ட வட்டமுலை யங்கயற்கண் மூத்தான கேள்வரொருநாள்
வகைகொண்டிருக்கு மறைநம்பர்பெற்றி வறியேனை யாளுநெறியே. ()

நெறிநின்றடங்கி நிலையான ஞானநேயத் தழுந்தவருநாள்
அறிவென்றறிந்த மதுரேசர்தம்மை யாராயவல்லருளரோ
பொறியெங்கு மூந்துபுலனுங் கடந்துபுவியுங் கடந்துபுவிமேற்
குறியுங்கடந்து குணமுங்கடந்து குறியாது நின்றகுறியே. (கூஉ)

ஏழைக்குகந்த பாகத்துநண்பரிஎ நீர்சுமந்த குலேசூழ்
தாழைப்பொதும்பர் மதுரைக்குளாடு சரணாரவிந்த நினைவார்
பேழைத்தனங் கண்மூடித்திறந்து பெருமைத்தனங்கள் சிறிதாம்
வாழைக்குறங்கின் மாழைக்கருங்கண் மடவார் தம்மாயமிலரே. (௬௩)

மாயாவிகாரி பூபாரமான மாபாவிமூடன் வறிஞோர்க்
கீயாதலோபி நோயாளனுன வெளியேனு முய்வதுளதோ
பாயாடை மூடிசமணக்குறும்பர் பகைவாது வென்றகனிவாய்ச்
சேயானவர்க்கோர் தாயாயளித்த திருவாலவாயிலரசே. (௬௪)

திருவாலவாயர் திருநீலகண்டர் திருவாதவூரின் முனிவர்
குருவாகிவந்த சிவஞானபோதர் குடியாகி வாழுமடியார்
உருவான மாயவடிவோடுகூடி யுடைபாய்கழிப்ப முடைபாய்
கருவாசலூடு வருவார்களல்லர் காணுதுபாவகதியே. (௬௫)

கதியேதுமின்றி யுனைவந்தடைந்த கடன்ஞால மீதுபிறவா
மதியேனை மூடுமிருளைத்துரக்கில் வசமாய் மறித்துவருமோ
துதியேதுமின்றி நீரிற்பிரித்த தொய்யிற் குழம்பதலவோ
நதியேடெதிர்ந்த புகழ்மேவு கூடனகர்வாழு ஞானமுதலே. (௬௬)

முதலைக்கொடுங்கு சிறுமீனிகர்ப்ப முடியக்கிடந்துனடியேன்
விதலைக்கிடங்கொள் பிணியாலொடுங்கு மெலிவைத்தவிர்ப்பதெதுநாள்
மதலைப்பசும் பொன்மலர் வேணிநம்பர் மார்பிற்கரும்பு வளர்பூங்
குதலைக்கரும்பினிட் மேவிநின்ற கூடற்பதிக்குளமுதே. (௬௭)

தேடித்திரிந்து மகிலாகமங்கள் சிந்தித்து மன்புதிரியா
தாடித்திரிந்து மாட்டாதபாவை யசையாதிருக்குமணிநா
நீடித்திரிந்த நிலைபெற்றிருந்து நினைபோதிலன்றி மறைநூல்
பாடித்திரிந்துன் மதுரேசர்தாள்கள் பதியக்கிடப்பதரிதே (௬௮)

அரியாசனத்தினடுவே கயற்கணருள் சேர்துணைப்பெண்ணொருபாற்
பிரியாதிருக்கு மதுரேசர் நித்தர்பிறைவேணி முத்தர்புகழைப்
புரியாதிருக்கினு யர்சிவன் முத்திபுரமேவுதற் கெளியதோ
முரியாத கற்பதருவானிடத்தர் முனிவோர் முதற்பிறருமே. (௬௯)

பிறவாததெய்வ மிறவாதவாழ்வு பேரின்பவெள்ள முனிவோர்
துறவாத ஞானமுமை மாதுபாகர் சொக்கேசர் முக்கண் முதல்வர்
நறவார் கடம்பவனநாதர் நீதிஞாலம் புரக்குமதனுன்
மறவாது திங்கண்மும்மாரி பெய்யமலிகின்ற மேகம்வருமே. (௰)

மதுரைப்பதிற்றுப்பத்தந்தாதி

முற்றுப்பெற்றது.

